அரசியல் தலைவர்களுடன் உயர்மட்டப் பேச்சுகள் நடாத்த

## அமைச்சர் குஜ்ரால் நவம்பரில் கொழும்புவிஜயம்

எதிர்வரும் நவம்பர் பதினொராம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சு ஐ. கே குஜ்ரால் கொழும்பு வரவுள்ளார். குஜ்ராலின் இலங்கை விஜயம் குறித்து நேற்று இந்திய அரசினால் வெளியுறவு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. கொழும்பு வரவுள்ள குஜ்ரால் மூன்று தினங்கள் இங்கு தங்கியிருப்பார் எனவும் இச்சமயத்தில் வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத், ஜனாதிபதி பிரேமதாஸ, எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா போன்ற அரசியற் தலைவர்களுடன் குஜ்ரால் உயர் மட்டப் பேச்சுகள் நடாத்துவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் இம்மாத இறுதியில் இந்திய அமைச்சர் குஜ்ரால் இங்கு வரவிருந்த போதிலும் அவரது விஜயம் திடீர் என ரத்து செய்யப்பட்டது. இந்திய வடமானிலங்களில் அதிகரித்த வன்முறையே அவர் விஜயம் திடீர் என ரத்தானதற்குக் காரணம் எனக் கூறப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 251 திங்கள் 22-10-1990 (ஐப்பசி 05) ற. ஆகிர் 02

# சீமெந்துத் தொழிற்சாலையை பிடிக்க ராணுவம் பிரயத்தனம்

## மாவிட்டபுரத்தில் மும்முனைகளில் விடுதலைப்புலிகள் சுற்றிவளைப்பு

சிமெந்துத் தொழிற்சாலையை இலக்காக வைத்து காங்கேசன் துறையைக் கைப்பற்ற பல அணிகளாக இராணுவம் முன்னேறி வருவதை விடுதலைப்புலிகள் தடுத்துத்தாக்குதல்களை நடாத்திவருகின்றனர்.

பலாலியிலிருந்து மயிலிட்டி வழியாக வெளியேறி காங்கேசன் துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ அணியொன்றை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

சுமார் நூறு இராணுவத்தினரைக் கொண்ட இப்படைப் பிரிவை கிழக்கே சாந்தைச் சந்தியிலும், மேற்கே மாவிட்டபுரம் சந்தியிலும், தெற்கே கட்டுவன் கொலனி வெளிப் பகுதியிலும் புலிகள் சுற்றி

— 04ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் வடக்கில் நேற்று பரவலாக வான் தாக்குதல்

வலிகாமம் வடக்குப் பகுதியில் இரு ஹெலிக்கொப்டர்கள் நேற்று முழுவதும் பரவலாகத் தாக்குதல்களில் ஈடுபட்டன.

கீரிமலை, இளவாலை, பண்டத்தரிப்பு, சிறு விளான், அம்பனை, கொல்லங்கலட்டி, அளவெட்டி, பன்னாலை ஆகிய பகுதிகளில் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வீதிகளில் சென்றவர்கள் பலர் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதே வேளை நேற்றுக் காலை அவ்ரோ விமானங்களும் பொம்மர்களும் மாவிட்டபுரம் பகுதி

—04ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் நேற்று பொம்மர் குண்டு வீச்சு

நேற்றுப் பகல் 1 மணியளவில் அரியாலை தபாற் கட்டைச் சந்தியில் அமைந்துள்ள சந்தை மீது பொம்மர் தாக்குதல் நடாத்தப்பட்டது.

ஆனால் சந்தைக்கு அருகில் உள்ள காணியில் குண்டு விழுந்து வெடித்தது. எவருக்கும் காயமோ உயிரிழப்போ ஏற்படவில்லை.

ஆனந்தன் வடலி வீதியிலுள்ள உத்தரவு பெற்ற வியாபாரக்கடை சிறிது சேதமடைந்தது. (47)

## இங்கும் ஹெலித்தாக்கு

கைதடி, நுணாவில் பகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன. வீதியால் சென்று கொண்டிருந்த பயணிகள் வாகனங்கள் மீது இத் தாக்குதல்கள் இடம்பெற்றன. (71)

சேந்தாங்குளம் கடலில்

## ஹெலிக்கொப்டரில் இருந்து சூடு மீனவர் இடது கையை இழந்தார்

இளவாலை சேந்தாங்குளம் கடற்பகுதியில் வள்ளங்களில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது நேற்றுக்காலை 8. 30 மணியளவில் ஹெலிக்கொப்டரில் இருந்து சரமாரியாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் அந்த வள்ளங்களில் இருந்தவர்களில் லாச

—04ஆம் பக்க்ம் பார்க்க

## ஏழாலை குரும்பசிட்டியில் பொம்மர் தாக்கு

நேற்று மாலை 5.30 மணியளவில் ஏழாலை, குரும்பசிட்டிப் பகுதியில் இரு பொம்மர்களும் ஒரு அவ்ரோ விமானமும் மாறிமாறிப் பலத்த தாக்குதலை மேற்கொண்டன. (48)

## கோப்பாயில் மின்கம்பங்கள் விமானத்தாக்குதலால் சேதம்

மிகுந்த சிரமங்கள் மத்தியில் சுன்னாகம் மின் நிலையத்திலிருந்து விநியோகிக்கப் படுவந்த நீர் மின்சாரத்தில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து 33 கே. வி மின்வலுவை சுன்னாகத்திற்கு காவிவரும் இரு மின்கம்பங்கள் நேற்று முன் தினம் விமானத் தாக்குதலி

—04ஆம் பக்கம் பார்க்க

## ஓ நெகடிவ் இரத்தம் அவசியம் தேவை

மானிப்பாய் யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் ஓ நெகடிவ் இரத்தத்திற்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகை இரத்தம் உள்ளவர்கள்மனிதாபிமானத்துடன் இங்கு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை நேற்றுமுன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கைதடியில் பொம்மர் தாக்கு

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் கைதடிப் பகுதியில் குண்டு வீச்சு விமானம் தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதலில் கைதடி கண்டி வீதியில் உள்ள சைவ அனாதை இல்லத்தின் மீது வீசப்பட்ட குண்டினால் மதில் சேதமடைந்தது.

—04ஆம் பக்கம் பார்க்க

ஆனையிறவு முகாமில் இருந்து

## வெளியேற எடுத்த முயற்சி புலிகளால் முறியடிப்பு

நேற்றுக்காலைஆனையிறவு முகாமில்இருந்து வெளியேற ராணுவத்தினர் எடுத்தமுயற்சியைவிடுதலைப் புலிகள்கடும் தாக்குதலை மேற் கொண்டு தடுத்து நிறுத்தினர்.

நேற்றுக்காலை 10. 30மணியளவில் ராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறிய போது இருதரப்பிற்கும் இடையே கடும் மோதல் ஏற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாலைதீவு, இரணைதீவுக் கடலில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

பாலைதீவு, இரணைதீவை அண்டிய பகுதிக்கடலில் கடந்த சில நாட்களாக கடற்படையினரின் விசைப்படகுகளும் பீரங்கிப் படகுகளும் தீவிர ரோந்து சேவையை ஆரம்பித்துள்ளதாக இப்பகுதியில் தொழில் செய்யும் குருநகர் மீனவர்கள் கூறுகின்றனர்.

சில சமயம் இப் பகுதிகளில்

—04 ஆம் பக்கம் பார்க்க

ஹெலி வருவதனை அறிவிக்க

## சாவகச்சேரிச் சந்தையில் எச்சரிக்கை மணி

ஹெலி வருவதை அறிவிப்பதற்காக சாவகச்சேரிச் சந்தையில் மணி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இம் மணியைஅடிப்பதற்குப் பொறுப்பாகவும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹெலி வரும்போது இந்த அபாய மணியைப் பொறுப்பாக உள்ளவர் அடிப்பார். உடனே சந்தையில் கூடி நிற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் இருந்து அவசரதேவைக்கு அம்புலன்ஸ்

மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்கள் தமது உயிரையும் துச்சமாக மதித்து தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அருகில் காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரியில் சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இச்சேவை அவசரம் தேவைப்படுபவர்கள் உடனடி

—04 ஆம் பக்கம் பாாக்க

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்

## பாரிஸ் மாநாட்டிற்கு பிரதமர் விஜேதுங்க செல்கிறார்

இவ்வாரம் பாரிஸில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளப் பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி.விஜேதுங்கஇன்று பிரான்ஸ் பயணமாகிறார்.

''இவ்வாண்டும் இலங்கைக்கு முன்னர் கிடைத்த நிதியுதவி போன்றே கிடைக்கும். எமது நாட்டின் பிரச்சினைகள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஒழுங்கீனங்களைத் தடுக்க புதிய உணவு அட்டைகள்

நிவாரண உணவுப் பொருட்கள் விநியோகத்தில் ஏற்படும் ஒழுங்கீனங்களைத் தவிர்க்கவும், சரியான மதிப்பீடுகளைப் பெற்றுச் சீரான விநியோகத்தை மேற்கொள்ளவும் யாழ் செயலகத்தினால் புதிய

—04 ஆம் பக்கம் பார்க்க

கந்த சஷ்டி சிந்தனை - 4

## வணங்குவது எமக்கு வேலை!

ஆடுமயிலை ஓங்காரமாகக்கண்டு தொழ வேண்டும் என்ற கருத்தை நேற்று முன்வைத்தோம். இன்று வேலின் பெருமை பற்றிச் சிந்திப்போம்.

வேல் முருகப்பெருமானுடைய ஒப்பில்லாத படைக்கலம். அன்னை பராசக்தியால் வழங்கப்பட்ட ஆயுதம் அது. அதனால் சக்திவேல் எனப்பட்டது.

வடிவேல், வெற்றிவேல், கதிர்வேல், ஞானவேல் என்றெல்லாம் வேலாயுதம் அழைக்கப்படுகிறது. இவை தவிர, தங்கவேல், மாணிக்கவேல், முத்துவேல், இரத்தினவேல் என அன்பர்கள் ஆராண்மையோடு கொண்டாடுவர்.

வேல் 'வெல்' என்பதன் அடியாய்ப் பிறந்தது. எல்லாவற்றையும் வெல்லுவது வேல். எல்லாப் படைகளுக்கும் நாயகமாவது வேலாயுதம்.

''எப்படைக்கும் நாயகமாவது ஒரு தனிச்சுடர் வேல்''

எனக் கந்தபுராணம் கூறும்.

'வேலும் மயிலும் துணை' என்று சொல்லி - எழுதி எக்காரியத்தையும் தொடங்குவது முருகனடியார் வழக்கம். உலகில் நாம் துணையென்று கருதுவன எல்லாம் கடைசிவரை நமக்குத் துணை வருவதில்லை. முருகன் கைவேலே எமக்கு மெய்யான துணை.

''வேலுந் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த் துணையே''

- அலங்காரம்

வேல்துணையாக வந்தால் எதற்கும்-யார்க்கும்- அஞ்ச வேண்டியதில்லை. ஒருமுறை காட்டில் வழிதவறி அலைந்த அருணகிரிநாதருக்கு வேலாயுதம் முன்னும் பின்னும் வலமும் இடமும் தோன்றி வழிகாட்டியது:

''தனித்து வழி நடக்குமென (து) இடத்தும் ஒரு வலத்தும் இரு

புறத்தும் அருகடுத்(து) இரவு பகல் துணையதாகும்!'

- வேல்வகுப்பு

தனிவழிச் செல்கையில், பயம் ஏற்படும் போது, வடிவேலும் மயிலும் துணைவரும் என்பார் சுவாமிகள்:

''பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே''

-அலங்காரம்

தேவசேனாபதியாய்ப் படைநடத்தி முருகன் அடைந்தவெற்றிகள் எல்லாம் வேலின் வெற்றிகளே. தாருகன் கிரௌஞ்சமலையாய் நின்றபோது மலையைப் பிளந்ததும், சூரன் கடலில் ஒளித்தபோது கடலைவற்றச் செய்ததும், ஈற்றில் அவன் உடலைப் பிளந்ததும் முருகன் திருக்கைவேலே என்று போற்றுகிறார் நக்கீரர்:

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை''

இந்த வேலுக்கு வேலை என்ன தெரியுமா? வெற்றி வாகை சூடுவது நமக்கு வேலை? வேலை வணங்குவது!

''தோகை மேல் உலவுங் கந்தன்
சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கு வேலை:
வணங்குவ (து) எமக்கு வேலை!''

ஈழநாட்டில் வேலை முருகனாகவே வணங்கும்-வழிபடும் - மரபு ஒன்றுண்டு நல்லூர், செல்வச்சந்நிதி முதலிய ஆலயங்களில் அதைக்காணலாம்.

வேலும் மயிலும் துணை

கொழும்புக்கெனப் புறப்பட்ட

## பயணிகளை நடுவழியில் தவிக்கவிட்ட சொகுசு பஸ்

கொழும்புப் பயணத்துக்கெனப்பணத்தை அறவிட்டு பயணிகளை இடைநடுவில் நிர்க்கதியாகத் தவிக்க விட்டுச் சென்ற, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சொகுசு பஸ் சேவை நிறுவனம் ஒன்றின் கண்ணியமற்ற செயல் குறித்து பலத்த கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரியவருவதாவது: குறிப்பிட்ட பஸ் முத்திரைச் சந்தியிலிருந்து கடந்த 14-ம் திகதி கொழும்பு நோக்கிப் புறப்பட்டதாகவும் கண்டாவளைப் பகுதி ஒட்டுக் தொழிற்சாலையில் பயணிகளை அந்த பஸ் சாரதியும், நடத்துநரும் இறக்கி விட்டு நில்லுங்கோ வாறம்'' எனக் கூறி நழுவப் பார்த்ததாகவும் கூறப்படுகிறது,

போக்குவரத்துச் சீரில்லை என அவர்கள் தாம் இறக்கியதற்குக்காரணமும் கூறினராம்.

பயணிகள் 150 ரூபா பணமாவது தருமாறு கேட்டும் அவர்கள் மசியவில்லையாம்,

மேற்படிப் பயணிகள் விட்டுச் சென்ற பயணப் பொதிகள் இப்போது மற்றொரு பயணியால் முத்திரைச் சந்தியிலுள்ள யாழ். போக்குவரத்துப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (74-70)

### மலேரியா தடுப்பு ஏற்பாடு

மண்டைதீவுக்கு மலேரியா நோய்த்தடுப்பு உத்தியோகத்தர்கள் வந்துள்ளனர்.

மண்டைதீவு கிழக்கு, தெற்கு சர்வோதயங்களில் தங்கியிருந்து நுளம்பு, ஈ தடுப்பு மருந்துகளை பாவிக்க இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மண்டைதீவு முதலாம் வட்டாரத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் இப்பணி நிறைவுபெற ஒருவாரமாகும் என கிராம சேவகர் திரு என். சுந்தரராஜன் தெரிவித்தார்.

மண்டைதீவில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி 'முரசொலி' சுட்டிக்காட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ப 12)

### தெற்கிற்கு இடம் பெயர்ந்தோர் அங்கேயே நிவாரணம் பெறலாம்

வடக்குக் கிழக்கிலிருந்து அசம்பாவிதம் காரணமாக தெற்கில் வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்தோர் தாம் தற்பொழுது தங்கியுள்ள மாவட்டங்களிலேயே உலர் உணவுப் பொருட்களை நிவாரணமாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தென் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளோர் தத்தமது பகுதி உதவி அரச அதிபர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமெனக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (16)

### தென்னைநாற்று விநியோகம்

வேலணை கமநலச் சேவை நிலையத்தில் நல்ல தரமான தென்னை நாற்றுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தென்னை உற்பத்தியைத் தீவுப்பகுதியில் அதிக அளவில் விருத்தி செய்யும் நோக்குடனேயே இந்தத் தென்னை நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (19)

### வேல் வணக்கம்

திருப்பரங்குன்றம்

சீர்த்தியாய்த் துதிகள் பாடித் திருவடிக் (கு) மலர்கள் தூவி
ஆர்த்தியாய் வழிபாடாற்றும் அன்பரின் இதயக் கோயில்
மூர்த்தியாய் விளங்கும் எங்கள் முதிர்பரங் குன்றின் வாழ்வாம்
கார்த்திகே யன்கை வேலைக் காண்பதே யெமக்கு வேலை.

திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

முறுவலிற் புரமெரித்த முக்கணன் தனக்கும் கும்பக்
குறுமுனி தனக்கும் போத குருவெனும் அரிய பேறு
பெறுமொரு சிறியன் தெய்வப் பிடிமகிழ் கணவன் செந்தூர்
ஆறுமுகன் கரத்து வேலை அடுப்பதே யெமக்கு வேலை.

திருஆவினன்குடி (பழனி)

மாதவன் மகிழ்ந்(து) அளித்த மடந்தையர் இருபால் மேவ
மேதகு மயிலின் மேல்ஓர் வெற்பினில் உதய மான
ஆதவன் எனவே போற்ற ஆவினன் குடியில் வாழும்
நாதன் செவ்வேளின் வேலை நாடுவ(து) எமக்கு வேலை.

திண்ணனார் சுவைத்(து) அளித்த தீஞ்சுவைக் கறி சுவைத்த
அண்ணலார் அணைத்துக் கண்ணே! அப்பனே! நீயே நேய
வண்ணமாம் பழம்என்று ஓத மகிழ்ந்து தென்பழனி வந்த
விண்ணவன் கரத்து வேலை விளம்புவ(து) எமக்கு வேலை.

திருஏரகம் (சுவாமி மலை)

சென்னி ஆறும் தணிந்த சிவபரஞ் சுடர்க்கு, வேதம்
சொன்ன ஆசிரியனென்று தொல்லுல கனைத்தும் போற்றப்
பொன்னிசூழ் ஏரகத்துப் பொருப்பினிற் கோலம் கொண்ட
பன்னிரு கையன் வேலைப் பணிவதே எமக்கு வேலை.

குன்றுதோறாடல் (திருத்தணி)

கொன்றைசேர் சடைகள் ஆடக் கொடியிடை உமையாள் காண
மன்றிலே ஆடல் கொண்ட மகதேவன் வியந்து வாழ்த்தக்
குன்றுதோ றாடல் காட்டும், குமரவேள் மலர்க்க ரத்து
வென்றிசேர் சத்தி வேலை வேண்டுவ(து) எமக்கு வேலை.

பழமுதிர் சோலை

புவனம்ஓர் மூன்றும் வாழப் புராரிதன் நுதற்கண் நோக்கில்
அவிர்சுடர் ஒளியாய்த் தோன்றி, அறுமுகத் தேவாய், அன்பர்
பவபயம் ஒழித்துக் காக்கப் பழமுதிர் சோலை மேவும்
சிவசுப்ர மண்யன் வேலைச் சேவிப்ப(து) எமக்கு வேலை.

—வரகவி அ. சுப்ரமணிய பாரதி

### சிறுவிளம்பரம்

தவறிவிட்டது

மீளக்குடியமர்த்தலுக்கான குடும்ப அட்டையும், மூக்குக் கண்ணாடியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். திரு.வ. வேலாயுதபிள்ளை ஆசிரியர், நாயன்மார்கட்டு. 10099

"முற்றுப்பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்"

யாழ் கோட்டையை
புலிகளின் முற்றுகையிலிருந்து விடுவிக்க
காரைநகரிலிருந்து கோட்டையை நோக்கிய
ஸ்ரீலங்கா அரசின்
படையெடுப்பும், அதன் முறியடிப்பும்.

சரித்திர ஆய்வாளன் 'அரவிந்தன்' எழுதும்
தொடர்விவரணம்.
வெகு விரைவில் முரசொலியில் ஆரம்பமாகிறது.

யாழ் குடாநாட்டு வரைபடமொன்று
இலவச இணைப்பாகப் பிரசுரமாகிறது.

முரசொலிப் பிரதிகளைத் தப்பாமல் பெற முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்!

அறிவித்தல்

குரு டீசல் எஞ்ஜினியர்ஸ்

மேற்படி எமது ஸ்தாபனம் இல. 50, கோவில் வீதி, கொக்குவில் என்னும் விலாசத்திற்கு இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது என எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
10100

பாரதக் கடற்படைக்கு

# கட்டப்பொம்மன் பெயரில் அதி நவீன வசதி நிலையம்

ஆசியாவிலேயே முதல் முறையாகப் பாரதத்தில் அதி நவீன தகவற் தொடர்புவசதி கொண்ட திட்டத்தைத் திருநெல்வேலி அருகே உள்ள விஜயநாராயணத்தில் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று முன்தினம் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இத்தகவற் தொடர்பு வசதிபெற்ற் உலகிலேயே ஐந்தாவது நாடு என்ற பெருமையும் கிடைத்துள்ளது.

''இதன் மூலம் பாரதக் கடற்படை வலுப்பெற்று சிறப்பான திறமையுடன் நாட்டின் கடலோரத்தைக் காக்க முடியும்'' என்று ஜனாதிபதி இந்நிகழ்ச்சியில் பேசுகையில் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிலையத்துக்குவிடுதலை வீரன் வீரபாண்டிய கட்டப்பொம்மன் நினைவாக ஐ. என். எப். கட்டபொம்மன் என்ற பெயரை திருமதி ஜானகி வெங்கட்ராமன் சூட்டினார்.

கடலடியில் உள்ள நீர்மூழ்கி கப்பல்களுடன் தொடர்பு கொள்ள வசதியளிக்கும் இத்திட்டம் மகத்தானது என்றும் குறிப்பிடப்பட்டது.

''1004 அடி உயரத்தில் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. 3000 ஏக்கர் பரப்பு நிலத்தில் இந்நிலையம் அமைந்துள்ளது'' என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## உபகரணங்கள் முற்றாகச் சேதம்

பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மும்முனைத் தாக்குதல்களினால் அராலித்துறை கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்திச் சங்கத்தினரின் வாடி, மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்கள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

இந்த மீன்பிடித் தொழிலாளர்களின் வாடி சேதமடைந்ததால் சுமார் இரண்டு லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாகவும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (12கி)

தேசிய முன்னணி அரசின்

# ஸ்திரம் மேலும் குலைந்திடும் நெருக்கடிமிக்க நிலை

''பாரதீய ஜனதாக்கட்சி தற்போதைய நிலையில் தேசிய முன்னணிக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டால் இந்திரா காங்கிரஸ் தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவளிக்காது'' என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ்காந்தி கூறியுள்ளார்.

''மேலும், பாரதீய ஜனதாக்கட்சி தலைமையில் அமையக்கூடிய அரசையும்நாம் ஆதரிக்க மாட்டோம்'' என்றார் அவர்.

இது இவ்வாறு இருக்க, ராமர் பிறந்த இடத்தில் கோயில் கட்ட இடமளிக்காத எந்த ஒரு தீர்வையும் தனது கட்சி ஏற்காது என பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி கூறியிருக்கிறார்.

தான் கைது செய்யப்பட்டாலோ தான் மேற்கொண்டுள்ள ரதயாத்திரை நிறுத்தப்பட்டாலோ தேசிய முன்னணி அரசுக்கான ஆதரவை தன் கட்சி விலக்கிக் கொள்ளும் என்றும் அவர் சொன்னார்.

தற்போது நிலவும் சூழ்நிலையினால் தேசிய முன்னணி அரசின் ஸ்திரம் மேலும் ஆட்டம் காணும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ் சுகாதார

# பணிப்பாளர் கரிசனையால் ஊழியர் சம்பளம் கிடைத்தது

யாழ் சுகாதாரத்திணைக்கள ஊழியர்களுக்கு இதுவரை கிடைக்காமல் இருந்து வந்த செப்ரெம்பர் மாதத்திற்கான சம்பளப் பணம் பணமாக யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை அண்மையில் கொழும்பு சென்று சுகாதார திணைக்கள உயரதிகாரிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தையை தொடர்ந்து யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களின் சம்பளப் பணமான சுமார் முப்பது இலட்சம் ரூபாவும் யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்களின் சம்பளப் பணம் சுமார் 20 இலட்சம் ரூபாவும் தற்போது பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்தடைந்திருக்கும் 'குமண' என்ற கப்பலின் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டது.

டாக்டர் கனகசபை கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து வகைகளை பெறுவது பற்றியும், வைத்தியசாலைகளில் இயங்கும் ஜெனரேட்டர்களுக்குத் தேவையான டீசலை பெறுவது பற்றியும் வலியுறுத்திக் கூறியதாகவும் அறியப்படுகின்றது. (13)

பாரிஸ் மாநாடு

# பிரதமமந்திரி இன்றிரவு குழுவுடன் பயணமாகிறார்

பிரதமமந்திரியும், நிதிமந்திரியுமான டி. பி. விஜயதுங்க இன்று நள்ளிரவு பாரிஸ்பயணமாகிறார்.

பாரிஸில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதிச்சபை மாநாட்டில் அவர் கலந்து கொள்வார் என்றும் அவருடன் நிதியமைச்சின் செயலாளர் மற்றும் உயரதிகாரிகளும் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காவுக்கான நிதியுதவியை இக்குழு வலியுறுத்தும் என்று கூறப்படுகிறது. (66)

மலையக வாலிபர்க்கு ரஞ்சன் விரிக்கிறார் மாயவலை

# முப்படையிலும் சேர்வதற்கு நடவடிக்கை எடுக்கத் தயார்!

''மலையக இளைஞர்கள் முப்படைகளிலும் சேர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளத் தயார்'' என்று பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜயரத்ன அறிவித்துள்ளார்.

''இதுவரை 125 மலையக இளைஞர்கள் பொலிஸ்சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோன்று கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றிலும் மலையக இளைஞர்கள் அங்கம் வகிக்க வேண்டும் என்பது என் விருப்பமாகும்' என்று அவர் கூறியுள்ளார்.

தெரணியக்கல முத்துமாரி அம்மன் கோயிலில் நடைபெற்ற விசேட பூஜையில் கலந்து கொண்டபின் உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு சொன்னார்.

''இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன்'' என்றும் அவர் கூறினார்.

## பதில்பிரதம அதிபராக தேவசகாயம் நியமனம்

யாழ்ப்பாணம் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றிய சு. பரராசசிங்கம் முல்லைத்தீவு மாவட்டத் தபால் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளதை யடுத்துப் பதில் பிரதம தபாலதிபராக எம். தேவசகாயம் கடமையேற்றுள்ளார்.

உதவிப் பிரதம தபாலதியர் எம். தர்மராசா கடந்தமாதத்துடன் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதால் உதவிப் பிரதம தபாலதிபராக எஸ் சிவஞானரத்தினம் கடமையாற்றிவருகிறமையும் குறிப்பிடத்தக்கது. (33)

## முல்லைத்தீவு தபால் விநியோகம்

புதுக்குடியிருப்பில் தற்காலிகமாகஇயங்கும் முல்லைத்தீவு தபாலகத்தில் முல்லைத்தீவுக்கான கடிதங்கள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இதுவரை கடிதங்களைப் பெறத் தவறியவர்கள் வேலை நாட்களில் காலை 9 மணி தொடக்கம்பிற்பகல்4மணிக்கு மிடையில் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. சு. பரராசசிங்கம் தெரிவித்துள்ளார். (33)

## தபாலகத்தை இயக்க முயற்சி

கடந்த பல மாதங்களாகச் செயற்படாமல் இருந்த மாங்குளம் தபாற்கந்தோரை மாற்று இடமொன்றில்இயங்க வைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தபால் அத்தியட்சகர் திரு சு. பரராசசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது சம்பந்தமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதற்கு மாங்குளம் தபாலதிபர் திரு கே. செல்லத்துரையை உடன் சந்திக்குமாறும் மாவட்டத் தபால் அத்தியட்சகர் கேட்டுள்ளார். (33)

பாடத்திட்டம் பூர்த்தியாகாததால்

# இவ்வருட வகுப்பேற்றப் பரீட்சை 1991 ஜனவரிக்குப் பிற்போடப்படும்

பாடசாலைகள் நீண்டநாட்களாக நடைபெறாமல் இருந்ததால் இவ்வாண்டுக்கான பாடவிதானங்களைப் பூர்த்தியாக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால் இவ்வாண்டுக்கான பாடவிதானங்களை மீள ஒழுங்குசெய்து அவற்றை வகுப்புகளில் நடைமுறைப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1991 ஜனவரியில் வகுப்பேற்றப்பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்றவாறு இப்புதிய பாடவிதானங்கள் தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான விசேட கூட்டமொன்று 24-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட சேவைக்கால ஆலோசகர்களும், விசேட அதிகாரிகளும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (70, 74)

# சங்கானை மருத்துவ மனையில் மருந்துகள் முடியும் நிலை

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இருந்த நோயாளிகள் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து மிகக்குறைவாக இருந்த மருந்துகள் முடியும் கட்டத்தை அடைந்துள்ளன.

இன்னும் சில தினங்களில் இவ் வைத்தியசாலையில் மருந்துத்தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்ற அச்சம் அவ் வைத்தியசாலையில் வேலை செய்யும் ஊழியர் மட்டத்தில் நிலவுகின்றது.

இதேவேளை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் வேலை செய்த ஊழியர்களின் சம்பளம் காசாக அவ் வைத்தியசாலைக்குரிய அதிகாரியினால் சனிக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது. (ப 30)

# 'தமிழர் துயருறுகின்றனரே' கவலைப்படுகிறார்ஜனாதிபதி

## - ஆன்மீகம் பற்றியும் போதனை

''வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெருந்தொகையான அப்பாவி மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்''

இப்படிக் கவலை தெரிவித்திருப்பவர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ.

அப்புத்தளையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனநாயகத்தின் முக்கியத்துவம் ஆகியனபற்றியும் அவர் குறிப்பிட்டார்.

## இப்பகுதிகளில் ஊரடங்குநீக்கம்

கிளிநொச்சி மாவட்டத்திலும், ஊர்காவற்றுறை, மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

தனியார்துறை ஊழியர்களுக்கு

# ஊழியர் பாதுகாப்பு நிதியத்துக்குபதிலாக சமூகபாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம்

தனியார்துறை ஊழியர்களுக்கு ஊழியர் பாதுகாப்பு நிதியத்திற்குப்பதிலாக சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி குறித்த ஊழியர் வயோதிபமடையும் போது அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன் அவர் இறந்த பின்னர் அவரது குடும்பத்துக்கு நிதியும் வழங்கப்படவுள்ளது. இதேபோன்று வலது குறைந்தோருக்கான ஓய்வூதிய திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழான சலுகைகளைப் பெறுவதற்கு ஒருவர் ஆகக்குறைந்தது 180 மாதங்களுக்காவது மாதாந்த கட்டுப்பணத்தைச் செலுத்தியிருத்தல் வேண்டும்.

அத்தகையோருக்கு ஓய்வூதியம் பெறும் வயதையடையும் போது 750 ரூபா அல்லது மொத்தக் கொடுப்பனவின் 35 வீதம் இதில் எது கூடவோ அத்தொகை மாதாந்த ஓவூதியமாக வழங்கப்படும். அத்துடன் மேலதிக கொடுப்பனவும்வழங்கப்படும்.

கொடுப்பனவின் 70 வீதத்தை ஒருவர் இத்திட்டத்தின்கீழ் ஆகக் கூடுதலான ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஓய்வூதிய வயதையடைய முன்னர் ஒருவர் ஓய்வூதியம் பெற நேர்த்தால் நிதியத்திலிருந்து கிடைக்கும் மொத்த வட்டிக்குரிய நன்மையை அவர் பெறுவார்.

# உலக அரங்கில்

## மலேஷியாவில் பொதுத் தேர்தல்

நேற்று மலேஷியாவில் நடைபெற்ற எட்டாவது பொதுத்தேர்தலின் முடிவுகள் இன்று காலை வெளிவரவுள்ளன. பிரதமர் மகிதீர்முஹமட்டின் ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பலத்த போட்டியை இம்முறை எதிர்கொள்கின்ற எதிர்க்கட்சி கூட்டணியின் தலைமையை ஏற்றிருப்பவர் முன்னாள் நிதி அமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்றுப்பெய்த கடும் மழையையும் பொருட்படுத்தாது ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் 180 பாராளுமன்ற ஆசனங்களுக்கான இத்தேர்தலில் வாக்களித்தனர்.

## ஆயுதக்கிடங்கு முற்றுகையை முறியடிக்க முயற்சி

ஆப்கானிஸ்தானில் கலாத் எனும் நகரை முஜாகூதீன் கெரில்லாக்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கு ஆப்கான் ராணுவத்திற்கும் முஜாகூதீன்களுக்கும் இடையே கடும் சமர் ஏற்பட்டுள்ளது. கலாத் நகரிலேயே ராணுவத்தினரின் முக்கிய ஆயுதக்கிடங்கு இருப்பதே இந் நகரில் மோதல் உக்கிரமாக நடைபெறக்காரணம் எனக்கூறப்படுகிறது. ஆப்கான் ராணுவம் பெருமளவில் விமான மற்றும் பீரங்கித்தாக்குதலை நடாத்திவருகிறது.

## 3 இஸ்ரேலிய சிப்பாய்கள் கொலை

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா வலையத்தில் பலஸ்தீனியர்கள் நடாத்திய தாக்குதலில் மூன்று இஸ்ரேலிய ராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் தொடர்பாக பலஸ்தீன இளைஞர் ஒருவர் கைதாகியுள்ளார். தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதியில் பராராணுவத்தினரும் மேலதிக பொலிஸாரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

---

# மன்னார்க் கச்சேரி மீண்டும் பழைய இடத்தில் இயங்குகிறது

மன்னார்க் கச்சேரி இம் மாதம் 8-ம் திகதி முதல் பழைய இடத்தில் இயங்கி வருகிறது. யூன் 21-ம் திகதி கச்சேரி உதவி அரச அதிபர் (தலைமையகம்) அறையில் 'ஷெல்' வீழ்ந்து வெடித்ததை அடுத்து சணி விலேஜுக்குக் கச்சேரி இடம் மாறியது.

தற்போது கணிசமான வெளிமாவட்ட அரச ஊழியர்களும் கச்சேரிக்குச் சமுகமளித்துள்ளார்கள். இதனால் கச்சேரியின் முக்கியமான கிளைகள் இயங்கி வருகின்றன.

கணக்குக் கிளையில்கொடுப்பனவு வேலைகள் நன்கு நடைபெற்று வருகின்றன. கச்சேரி ஊழியர்க்கு யூன், யூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதச் சம்பளம் வழங்கப்பட்டது.

கச்சேரி இயங்குவதால் இப்பகுதியில் ஓரளவு சன நடமாட்டத்தைக் காண முடிகிறது. (17)

## 1987 இல் இந்திய இராணுவத்தின்

# யாழ் ஆஸ்பத்திரிப் படுகொலை மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

1987 இல் அக்டோபர் 21-ம் திகதி இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் படுகொலை செய்த ஒரு டாக்டர் உட்பட 21 பேரின் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7. 30 மணியளவில் இவர்களின் உருவப் படங்களுக்குப் போதனா வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள் தீபம் ஏற்றி இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (ப 11)

### கைதடியில்...

இங்கு இருந்த அனாதைச் சிறுவர்கள் ஏற்கனவே இடம் மாறியதால் எதுவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.(71)


## காலமானார்

**Mary Agnes Ariyanayaham**

**மேரி அக்னஸ் அரியநாயகம்**

அச்சுவேலி தொழிற்பேட்டை வீதியில் வசிக்கும் திருமதி மேரி அக்னஸ் அரியநாயகம் காலமானார். இவர் திரு. M. J. B. அரியநாயகத்தின் அன்பு மனைவியும், ராசேஸ்வரன், றவி, றஜி, றதிக்கா, ராஜன், றஞ்சித், கலா இவர்களின் அருமைத் தாயாரும், நெவின்ஸ் குணராஜா, காலஞ் சென்றS.J. பொன்ராஜா, ராசாத்தி, ராஜினி இவர்களின் அன்பு மாமியாரும், காலம் சென்ற திரு. திருமதி யோசவ் பொன்னையா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும். காலம் சென்ற J. A. ஜெகராஜா, J. P. சிங்கராயர், அருட்தந்தை J. P. E. செல்வராஜா, அருட்செல்வி ஜெம்றாம் A. C, ராணி, நவமணி, ஆன்-சபீனா இவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 3, றக்கா லேன் இல்லத்தில் இருந்து 22.10 90 திங்கள் மாலை 3 மணிக்கு யாழ் மரியன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அச்சுவேலி — M. J. B. அரியநாயகம்

10101


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 22-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### ஆனையிறவு உப்பளத்தில்

# 70 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை சந்தைப்படுத்த முடியவில்லை

ஆனையிறவு உப்பளத்தில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான (70 ஆயிரம் மெற்றிக் தொன்) உப்பு சந்தைப்படுத்த முடியாது தேங்கியுள்ளது.

அரச உப்புக் கூட்டுத் தாபனத்தின் ஏனைய உப்பளங்களைவிட ஆனையிறவு உப்பளமே 75 சதவீதமான உப்பை உற்பத்தி செய்கிறது.

தற்போது இங்குள்ள விடுதிகளில் இராணுவம் குடிகொண்டிருப்பதால் இதன் வேலைகள் பாதிக்கப்பட்.டுள்ளன

இதனால் உப்பைச் சந்தைப் படுத்தவும் முடியவில்லை.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று வருடங்களுக்குப் போதுமான உப்பு இங்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## வீர மரணம்

பலாலிப் பகுதியில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே நடைபெற்ற மோதலின் போது வீரவேங்கை ஜெனி (வெள்ளையன்- ஜெகதீஷ்வரன், கைதடி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## அடையாளம் காட்டிப் பெறுக

பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட மஞ்சள்நிற பெறுமதி மிக்க பொருட்கள் உள்ள பொதி ஒன்று முத்திரைச்சந்தியில் இருக்கும் போக்குவரத்துப் பகுதியில் உள்ளது. உரிமையாளர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார். (70, 74)

### பாலைதீவு...

இருந்து மீன்பிடிவள்ளங்களை நோக்கி கடற்படையினர் சுடுவதாகவும், இதனால் மீனவர்கள் இப் பகுதிக்குத் தொழிலுக்குச் செல்வதற்கு அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது (ப17)

### வெளியேற...

பட்டது இதைத் தொடர்ந்து ராணுவம் முகாமிற்கு பின்வாங்கியது இம்மோதலில் ராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். புலிகள் தரப்பில் அப்பன்(பளை)வீரமரணமடைந்தார்.

### ஹெலிக்கொப்டர்...

ரஸ்பிள்ளை சேபமாலை நாயகம் (36) என்பவர் தனது இடது கையை இழந்துள்ளார்.

ஏனையவர்கள் கடலில் குதித்து தப்பிக்கொண்டனர். (ப 11)

### கோப்பாயில்...

னால் கோப்பாய் வெளியில் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதே வேளை பலாலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் சுன்னாகம் மின் நிலைய ஊழியர்கள் வேலை செய்யமுடியாத நிலையும் உருவாகியுள்ளது.(70,74)

### வலிகாமம்...

யில் தாக்குதல் நடாத்தின.

காங்கேசன் சிமெந்து ஆலையை அண்டிய பகுதிகளில் நேற்றுக்காலை 6. 30 மணியளவில் வை-12 விமானம் குண்டுகளை வீசியது.

கீரிமலை - கருகம்பானை வீதியில் விழுந்த குண்டுஒன்று வெடித்து பாலு, சீனியர் ஆகியோரின் வீடுகளும் வாழைத் தோட்டமும்சேதமடைந்தன.

விழிசிட்டி செரியாவிடை என்ற இடத்தில் விழுந்த குண்டினால் இராசரத்தினம், தவராசா, இரத்தினசிங்கம் ஆகியோரின் வீடுகள் சேதமாகின.

மகாஜனாக் கல்லூரி வீதியில் இரு குண்டுகள் போடப்பட்டன. ஆசிரியர் வரதனின் வீடும் சேதமானது.(48ப11)

## யாழ் அரச அதிபர் கொழும்பு செல்வார்

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அடுத்த வாரம் கொழும்பு செல்லவிருக்கிறார்.

யாழ் மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்கள் ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாகவும் மற்றும் அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாகவும் கொழும்பிலுள்ள உயரதிகாரிகளுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (66)

## மின்மாற்றியில் ஓயில் திருட்டு

பண்டத்தரிப்பு பகுதி மின் மாற்றிகளில் ஓயில் திருடப்பட்டதால் தற்போது வழங்கப்படும் மின்சாரம் இப்பகுதிக்கு கிடைக்கவில்லை.

இந்தத்திருட்டு சம்பந்தமாக இருவர் சந்தேகத்தின் பேரில் பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ப 30)

### சாவகச்சேரிச்...

கும் மக்கள் பதுங்கு குழிகளினுள்ளும், வேறு பாதுகாப்பான இடங்களிலும் ஒதுங்கக் கூடியதாக இருக்கும்.

வியாபாரிகள் எல்லோரும் சேர்ந்து மணிக்குப் பொறுப்பாக உள்ளவரின் ஊதியத்தை வழங்குவார்கள்.

இந்த நடவடிக்கை சனிக்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இச் சந்தையில் சமீபத்தில் ஹெலி தாக்குதலில் 12 பேர் இறந்ததன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ப 32)

### பாரிஸ்...

குறித்து அந்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கவுள்ளேன்'' என விஜேதுங்க நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஓ நெகட்டிவ்...

தினம் இரத்தம் வழங்கிய தொண்டர் ஸ்தாபனங்களையும், தனிப்பட்டவர்களையும் டாக்டர்கள் பாராட்டினார்கள். (ப-11)

### ஒழுங்கீனங்களைக் :

முறையிலான ''உலர் உணவு விநியோக அனுமதி அட்டைகள்'' தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள சுமார் இரண்டு லட்சத்து பதினையாயிரம் குடும்பங்களுக்குவிநியோகிக்கப்படவிருக்கும் இவ் அட்டைகள் வெவ்வேறு நிறங்களைக் கொண்ட மூன்று வகையாக அமையும்.

தொழில் இழந்தோர், இடம்பெயர்ந்தோர், 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர் என்றபிரிவுகளாக இருக்கும்.

இம்மாதம் 27 ஆம் திகதி முதல் இப்புதிய அட்டையின் படி உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. (66)

## இணுவிலில் இன்று முதல் விநியோகம்

இதுவரை காலமும் வேறு இடத்திற்குச்செல்லாது தெல்லிப்பழை ப நோ. கூ சங்க தொழிற்பரப்பில் இருந்த எமது சங்கத்திலேயேஉணவுப் பொருட்கள் பெற்றவர்கள் இப்பொழுது இடம்பெயர்ந்து சென்று இணுவில் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் விசேட உணவு விநியோகம் இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

இதுவரை காலமும் வேறு ப. நோ. கூ. சங்கத்தின் உலர் உணவு இலவசமாகப் பெறாதவர்கள் மட்டும் எமது சங்கக் கொள்வனவு அட்டையைக் கொண்டு வந்து மிக அத்தியாவசியமான பொருட்களை மட்டும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## காலில் படுகாயம்

சில்லாலையிலிருந்து கீரிமலைக்கு தமது வீடு பார்க்கச் சென்ற இராசதுரை ஜெயக்குமார் (15) ஹெலிக்கொப்டர்த் தாக்குதலில் காலில் படுகாயமடைந்த நிலையில் மானிப்பாய் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-11)

### தெல்லிப்பழை...

யாகத் தெல்லிப்பழை செஞ்சிலுவைச்சங்கப் பிரிவுடன் தொடர்பு கொண்டால் அம்புலன்ஸ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

### சிமெந்து...

வளைத்து உக்கிரமாகத் தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

இப்படைப்பிரிவுக்கு முன்சென்ற மற்றொரு பிரிவும் திஸ்சவிகாரையில் இருந்து வெளியேறி காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் மேற்குப் புறமாக தென்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற ஒரு படைப் பிரிவுக்கும் இடையில் புலிகள் இடைவிடாது கடும் தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர்.

இதேவேளை காங்கேசன்துறைக்கு முன்னேறும் முயற்சியில் கடற்கரைப்பகுதியை நோக்கி மயிலிட்டி யூடாக இராணுவத்தினரின்வேறொரு பிரிவும் முயன்று வருகின்றது.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயப் பகுதியிலும் குரும்பசிட்டி பொன்பரமானந்த மகாவித்தியாலயப் பகுதியிலும் கட்டுவன் சந்திப் பகுதியிலும், இராணுவம் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்நின்ற இடத்திலிருந்து எவ்விதத்திலும் முன்னேற முடியாதவாறு நிற்கின்றது.

இதேவேளை, மாவிட்டபுரத்துக்கு கிழக்கேயுள்ள வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் இராணுவம் முகாமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவங்களின் போது ஒரு விடுதலைப் புலிப் போராளி வீரமரணமடைந்துள்ளார். இராணுவ தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக அறியவருகின்றது. (32 48)